திராவிடன்

சென்னை, 1929 பிப்ரவரிமீ 26

ஆதிதிராவிடர்கள் மகாநாடு

சென்ற ஞாயிற்றுக் கிழமை விக்டோரியா பொது மண்டபத்தில் ஒடுக்கப்பட்ட வகுப்பாராய ஆதிதிராவிடர்களின் அகில இந்திய மகாநாடு திரு. பி. சி. மண்டல் பி. ஏ. அவர்களின் தலைமையின் கீழ்க் கூடிற்று. அம்மகாநாட்டிற்கு இந்தியாவின் பல பாகங்களிலிருந்து மேற்கே பஞ்சாப் முதல் கிழக்கே வங்காளம் வரை, வடக்கே ஐக்கிய மாகாணம் முதல் தெற்கே திருவாங்கூர் வரை பிரதிநிதிகள் வந்து மகாநாட்டில் கலந்துகொண்டது குறிப்பிடத்தக்கதாகும். மற்றும் இம்மகாநாட்டில் பிரபு திலகர் ராவ்பகதூர் மதுரைப்பிள்ளையும் கலந்து கொண்டது பாராட்டத்தக்கதாகும். திரு. எம். சி. ராஜாவும், ராவ்பகதூர் மதுரைப்பிள்ளையும் ஒன்று சேர்ந்ததே ஆதிதிராவிடர்களின் முன்னேற்றத்திற்கு நற்குறி என்று சொல்வோம்.

மகாநாட்டின் கொடியை உயர்த்திய திரு. ஆர். டி. கேசவலு அவர்களின் சொற்பெருக்கும், மகாநாட்டைத் திறந்து வைத்த திரு. கவாய் அவர்களின் சொற்பெருக்கும், மகாநாட்டின் வரவேற்புக் கழகத் தலைவர் திரு. கே. வி. சாமி அவர்களின் சொற்பெருக்கும், மகாநாட்டின் தலைவர் திரு. மண்டல் அவர்களின் சொற்பெருக்கும், ஆதிதிராவிடர்களின் முன்னேற்றத்திற்கு இன்றியமையாத வழிகளைக் காட்டுவனவாய் உள்ளன. ஆகவே, ஆதிதிராவிட சகோதரர்கள் ஆண்கள், பெண்கள் யாவரும் மேற் கூறிய ஆதிதிராவிடத் தலைவர்கள் சொற்பெருக்குகளை ஊன்றி நோக்கி, அதன்படி நடப்பார்களாக.

ஆதிதிராவிட மகாநாட்டில் பேசிய ஒவ்வொரு தலைவரும் ஆதிதிராவிடர்களின் தற்கால பரிதாப நிலையை எடுத்துரைத்து உயர்ந்த வகுப்பார் என்று சொல்லிக் கொள்வோரின் சாதிக் கொடுமைகளையும், மதத்தின் பெயரால் வலியுறுத்தப்படும் தீண்டாமையின அக்கிரமதலைப் பற்றியும் விரித்துரைத்து சைமன் கமிஷனை வரவேற்கின்றார்கள். நாம் இவர்கள் சொல்லும் ஒவ்வொன்றையும் ஆதரிக்கின்றோம். திரு. கேசவலு அவர்கள் சொல்லுகின்றபடி, இந்தியாவில் தீண்டாமை இருக்குமட்டும், சாதிக் கொடுமைகள் தலைவிரித்தாடுமட்டும், இந்தியர் நாகரிகமுள்ள தேசங்களுள் ஒன்றாக எப்படி மதிக்கப்படும். இந்தியாவில் சாதி வேற்றுமைகளையும், நான் உயர்வு, அவன் தாழ்வு என்ற ஆபாசக் கொள்கைகளையும் வைத்துக் கொண்டு, சமத்துவம், சகோதரத்துவம் சுயராஜ்யம், சுயேச்சை என்று பேசுவது, தாயைப் பிச்சை எடுக்க விட்டுவிட்டு மகன் காசியில் கோதானம் செய்யும் அயோக்கியத்தனத்தை ஒத்திருக்கின்றதென்றே சொல்வோம்.

இனி, மகாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களைக் குறித்துச் சிறிது கவனிப்போம். ஒரு தீர்மானம ஒடுக்கப்பட்ட வகுப்பாருக்கு எல்லாச் சட்டசபைகளிலும், தாலூக்கா போர்டு, ஜில்லா போர்டுகளிலும் தனிப்பிரதிநிதித்துவம் கொடுக்கப்படல் வேண்டுமென்று வலியுறுத்துகின்றது. ஒடுக்கப்பட்டாருக்குத் தனிப்பிரதிநிதித்துவம் மிகஇன்றியமையாததாகும். ஏனெனின், சாதிச் சண்டைகளும், மதச்சண்டைகளும் தலைவிரித்தாடும் இந்நாட்டில் ஆதிதிராவிடர்கள் பொதுத்தேர்தலில் வரமுடியாது என்பது திண்ணம். ஆகையினாற்றான் ஆதிதிராவிடர்களுக்குத் தனிப்பிரதிநிதித்துவம் கொடுக்கப்படல் வேண்டுமென்பதை நாம் ஆதரிக்கின்றோம்.

இனி இம்மகாநாட்டில் இந்திய அரசாங்கத்தார் ஒடுக்கப்பட்டவகுப்பாரின் நிலையை விசாரித்துணர்ந்து, அவர்கள் முன்னேற்றத்துக்கு வழி...

சுரங்கத்தில் பாரை வெடிப்பு

ஒன்பது பேர் புதைந்தனர்

எல்லோரும் இறந்தனர்

ஜர்காம், பிப், 25

சனிக்கிழமை மாலை மைசூர் சுரங்கத்தில் பாரை யொன்று வெடித்தது. அதில் ஒன்பது சுரங்கக் கூலிகள் புதைபட்டனர். அவர்கள் எல்லோரும் இறந்துவிட்டதாய் கூறப்படுகின்றது. அவர்களை வெளியே எடுக்க வேலைகள் மும்முரமாய் நடைபெறுகின்றன

குஜராத்தில் விளை பொருட் சேதம்

பம்பாய், பிப், 25

குஜராத்தில் மிக்க பனியினால் நல்ல விளைவே கிடையாது. இதுபற்றி, அரசாங்கத்தார் வரி வசூலிப்பதை நிறுத்தி வைத்திருக்கின்றனர். வரிவசூலிப்பதைப் பற்றி தற்போதுள்ள நிலைமைக்குத்தக்க புதிய சட்டங்கள் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. புதிய சட்டங்கள் வெளிவரும்வரையில் வரி வசூல் செய்யப்படாதென அரசாங்கத்தார் தீர்மானித்திருக்கின்றனர்.

திரு. ஜின்னாவின் அறிக்கை

பம்பாய், பிப்ரவரி, 25

தன்னுடையமனைவி இறந்தமைபற்றி தனக்கு அநுதாபம் கூறிய எல்லா வகுப்பினர்கட்கும் தனது நன்றியை அ. பிரஸ் மூலமாய் திரு. ஜின்னா தெரிவித்துக் கொள்ளுகின்றார்.

இன்று திரு. ஜின்னா டில்லி நகரத்தை நோக்கி புறப்பட்டு விட்டார்.

செய்யப்படல் வேண்டுமென்றுஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இதையும் மிக அவசியமென்போம். இந்திய அரசாங்கத்தார் அடிக்கடி தாம் ஒடுக்கப்பட்ட வகுப்பாரின் பிரதிநிதிகள் என்று சொல்லிக் கொள்ளுகின்றார்கள். இவர்கள் சொல்வதுஉண்மையாயின் இத்தீர்மானத்தின்படி, அவர்கள் ஒருகமிட்டியை நியமனம் செய்தல் வேண்டும். இல்லாமற்போனால் அவர்கள் பேச்செல்லாம் வெறும் பேச்சென்றே சொல்வோம்.

வரவு-செலவு

1929-30 ஆம் ஆண்டின் அஃதாவது வரும் ஆண்டின் வரவு செலவுத் திட்டம் இன்று கனம் மாயர் அவர்களால் சட்டசபையில் வெளிப்படுத்தப்பட்டது. வரும் ஆண்டில் எதிர் பார்க்கப்படும் வருமானம் 1807·09 இலட்ச ரூபாய்கள்; எதிர் பார்க்கப்படும் செலவு 1726·10 இலட்சம் ரூபாய்கள்; செலவுகளையெல்லாம் ஒப்புக் கொள்ள முடியாதெனினும், வரவைக் காட்டிலும் செலவு குறைந்திருப்பதைப் பற்றி நாம் ஒரு வகையில் மகிழ்ச்சிப் பெருக்கடைகின்றோம்.

வரும் ஆண்டில் புதிய திட்டங்கள் என்ன என்பதைக் கவனிப்போம். திருவண்ணாமலை தாலூக்காவை இரண்டாய்ப் பிரிக்கப் போகின்றார்கள். வெட்டை முதலிய காம நோய்களால் வருந்துவோருக்கு மருத்துவம் பார்க்க அதிகப்பட்ட வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன. இந்திய மருத்துவக் கல்லூரியின் சீர்திருத்தத்திற்கும் பணம் ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளது.

நாம் கோரிய: மதுவிலக்குப் பிரசாரத்துக்கு 4 லட்சம் ரூபாய் ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளது. இது பற்றி நாம் பெரிதும் மகிழ்ச்சியடைகின்றோம். ஏனெனின் மதுவிலக்குப் பிரசாரத்தினால் தான் நம் நாட்டில் குடியொழிய வேண்டியதாய் இருக்கின்றது.

பெண்கல்வி, கீழ்த்தரக் கல்வி, கிராமரோட்டுகள், கிராமத்திற்குத் தண்ணீர் வசதி முதலியவைகட்குப் பணம் ஒதுக்கி வைக்கப் பட்டிருக்கின்றதெனினும், அது போதியதல்ல. நம் நாட்டின் விடுதலைக்கு நம் நாட்டில் சுயமரியாதை உணர்ச்சி எழுவதற்கு அடிப்படையாய் இருப்பன: கல்வியும், கிராமச் சீர்திருத்தமும். இவைகளைப் பட்டினி போட்டு விட்டு பயனற்றவைகளுக்கெல்லாம் பணம் ஒதுக்கி வைத்திருப்பது கண்டிக்கத்தக்கதாகும். வரவு செலவு திட்டத்தைப் பற்றி விரிவாய் வாதம் நடைபெறுகின்ற காலத்து எடுத்துக் கூறுவோம்.

சென்னை அரசாங்கத்தின் வரவு செலவு

மதுவிலக்குப் பிரசாரத்துக்கு 4-லட்சம்

	1927—28
வரவு	1756·96 லட்சம்
செலவு	1555·23 ,,
	1928—1929
	(திருத்தப்பட்ட திட்டம்)
வரவு	1807·47 ,,
செலவு	1684·50 ,,
	1929—30
எதிர்பார்க்கப்படும் வருமானம்	1807·09 ,,
எதிர்பார்க்கப்படும் செலவு	1726·10 ,,

சென்னை, பிப்ரவரி, 26.

இன்று காலை 11-மணிக்கு சென்னை சபை மீண்டும் சபைத்தலைவர் ராவ்பகதூர் வி. வி. எஸ். நரசிம்மராஜு அவர்கள் தலைமையில் கூடியது. இன்று கூட்டத்திற்கு மிகச் சொற்பமான மெம்பர்கள்தான் வந்திருந்தனர்.

எஸ்டேட் நிலச் சட்டத் திருத்த மசோதா

கேள்விகளுக்கு வழக்கம்போல பதிலளிக்கப்படும்போது ஸ்ரீமான் பஷீர் ஆமத் எஸ்டேட் நிலச் சட்ட மசோதா வைத் திருத்தும் நகல் மசோதாவின் மீது ரெவினியூ போர்டின் அபிப்பிராயம் சர்க்காருக்குக்கிடைத்ததா? அதனை யொட்டி சர்க்காரால் ஆலோசிக்கப்பட்டதா? ஜனவரிமாதக்கூட்டத்தில் அம்மசோதா சபைமுன் ஆஜர் படுத்தப்படக்கூடுமா வெனக் கேட்டதற்கு அத்தகைய அபிப்பிராயம்கிடைத்து அதன் மேல் ஆலோசிக்கப்பட்டு வருவதாகச் சர்க்கார் தரப்பில் பதிலளிக்கப்பட்டது.

சத்திய மூர்த்தி:—அம்மசோதாவை எப்போது சபைமுன் ஆலோசனைக்குக் கொண்டுவரக் கூடுமென்று சர்க்கார் எதிர் பார்க்கின்றது?

கனம் ரெவினியூ மெம்பர்:—வரவு செலவுத் திட்டவேலைகள் முடிந்த பிறகு அதன் சம்பந்தமாகக் கவனிக்கப்படும்.

விஸ்வநாத தாஸ்:—இச்சபையின் கூட்டகாலத்திற்குள்ளாகவே மசோதா கொண்டுவரப்படக்கூடுமா?

கனம் ரெவினியூ மெம்பர்:—அப்படித்தான் கருதப்படுகின்றது.

கொக்கி புழுமருந்தால் இறந்த மாணவி

திரு. கே. மாதவன் நாயர்:—சுகாதார மந்திரி கீழ்க்கண்ட கேள்விகளுக்கு தயவு செய்து பதிலளிப்பாரா:—

(அ) கள்ளிக்கோட்டையைச்சேர்ந்த மமுத்திபாரா பெண் பாடசாலையில் வாசித்து வந்த 5வயது சிறுமி தனக்கு கொக்கி புழு மருந்து கொடுக்கப்பட்ட பிறகு உடனே இறந்துபோனது மந்திரிக்குத் தெரியுமா?

(ஆ) அப்பெண்ணுக்கு மருந்து கொடுத்து எவ்வளவு நேரம் கழித்து அவள் இறந்து போனாள்?

(இ) அன்று அவ்வகுப்பில் எத்தனை குழந்தைகளுக்கு அவ்வாறு மருந்து கொடுக்கப்பட்டது?

(ஈ) அன்று மருந்து கொடுக்கப்பட்டதன் பலனாக எத்தனை பேர்களை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போகப்பட்டது?

(உ) அந்த மருந்து கொடுத்த டாக்டர் அப்பெண் வலிப்பினால் இறந்ததாகக் காரணம் சொன்ன போதிலும் அக்குழந்தையின் பெற்றோர் அதனைக் கண்டிப்பாய் மறுத்ததுண்மையா?

(ஊ) பாடசாலை அறைக்கு வெளியே டாக்டரின் பியூன் குழந்தைகளுக்கு மருந்து கொடுத்துக் கொண்டிருக்கையில் டாக்டர் ஒரு உபாத்தினியுடன் பள்ளிக்கூட அறையில் வார்த்தையாடிக் கொண்டிருந்ததுண்மையா?

(எ) இவ்விஷயமாக மந்திரி ஏதாவது விசாரணை நடத்தினாரா? இல்லையேல் உடனே விசாரிக்கக் கூடுமா?

இக்கேள்விகளுக்குப் பின் வருமாறு பதிலளிக்கப்பட்டது:—

(அ) ஆம்.

(ஆ) அப்பெண் மருந்து கொடுத்து அரை மணி நேரத்திற்குள் இறந்து போனாள்.

(இ) அன்று மொத்தத்தில் 83 பேருக்கு மருந்துகொடுக்கப்பட்டது.

(ஈ) கள்ளிக் கோட்டை பைத்தியக்கார ஆஸ்பத்திரிவார்டர்களின் குழந்தைகள் ஆறு மேற்படி ஆஸ்பத்திரிக்கும், மற்ற குழந்தைகள் ஹெட்குவார்டர் ஆஸ்பத்திரிக்கும் கொண்டுபோகப்பட்டன.

(உ) டாக்டர் அக்குழந்தை வலிப்பினால் இறந்ததாகச் சொல்லவில்லை.

(ஊ) டாக்டரினால்தான் மருந்து கொடுக்கப்பட்டதேயன்றி பியூன் கொடுக்கவில்லை.

(எ) அதனைக்குறித்து விசாரிக்கப்பட்டது. ஆதலால் இனி விசாரிக்க வேண்டுமென்ற கேள்வி எழவில்லை.

மாதவன் நாயர்:—அத்தகைய விசாரணையும் அதன் முடிவுமென்ன?

மந்திரி முக்கையா முதலியார்:-அதன் சம்பந்தமாக ஜில்லா வைத்திய அதிகாரியும் பொது சுகாதார டைரக்டரும் விசாரித்து அம்மருந்து கொடுக்கப்பட்டதால் அக்குழந்தை இறக்கவில்லை என்று அறிவித்தனர்.

மாதவன் நாயர்:-என் கேள்வி மந்திரி விசாரித்தாரா வென்பதுதான்.

கனம் மந்திரி:—மந்திரி நேரே எத்தகைய விசாரணையும் நடத்துவதில்லை. அவருக்குக் கீழ்ப்பட்ட அதிகாரிகளின் மூலமாகத்தான் விசாரிக்கப்படுவது வழக்கம்.

மாதவன்நாயர்:— அப்பெண் இறந்ததற்கு சரியான காரண மென்ன?

கனம்மந்திரி:— மயங்கி விழுந்ததினால் இருதய ஓட்டம் நின்றுபோனதுதான்.

மாதவன் நாயர்:—அக்குழந்தைக்கு அதற்கு முன்பு எப்போதாவது இருதய நோய் இருந்ததாய் அறியப்பட்டதா?

கனம் மந்திரி.— இக்கேழ்விக்குப்பதிலளிக்க நோட்டீஸ் கொடுக்கப்படவேண்டும்.

மாதவன்நாயர்:— அப்பெண்ணுக்கு வலிப்புவந்து அதனால் இறந்ததாய் யாராவது காரணம் சொல்லியதுண்டா?

கனம் மந்திரி?— அவ்வாறு எத்தகையவிவரமும் சர்க்காருக்குக் கிடைக்கவில்லை.

டாக்டர் மல்லையா:—இறந்து போன அப்பெண்ணின் பிரேத பரிசோதனை நடத்தப்பட்டதா? குழந்தையின் குடலிலிருந்து மருந்தெடுத்து கெமிகல் எக்ஸாமினருக்குப் பரிசீலனைக்கு அனுப்பப்பட்டதா?

கனம் மந்திரி:—மருந்தைகெமிகல்எக்சாமினருக்கு அனுப்பப்பட்டதில் அதில் குற்றமில்லை என்றறியப்பட்டது. அக்குழந்தையின் பிரேத பரிசோதனை செய்யப்பட்டதா வென்று தெரியாது.

டாக்டர் மல்லய்யா:—குழந்தையின்குடலிலிருந்த பாக்கி மருந்தை பரிசோதனைக்கு அனுப்பப்பட்டதா?

கனம் மந்திரி:— கெமிகல் எக்சாமினருக்குப் பரிசிலனைக்கு அனுப்பப்பட்ட மருந்து குழந்தையின் குடலிலிருந்து எடுக்கப்பட்டதா வென்று எனக்குத் தெரியாது. இதன் சம்பந்தமாகப் பதிலுக்கு நோட்டீஸ் கொடுக்கப்படவேண்டும்.

க்ஷயரோக சிகிச்சைக்கு ஏற்பாடு

திரு. ஜே. எ. சல்தானா சர்க்கார் வைத்தியசாலைகளின் மூலமாகவாவது அல்லது பிரத்தியேக ஸ்தாபனங்களுக்குதவி புரிவதன் மூலமாயாவது 1929-ம் வருடத்தில் க்ஷயரோக சிகிச்சைகளுக்கு ஏதாவது விசேஷ ஏற்பாடு செய்யப்பட்டதா? 1929-ம் வருடத்தில் அத்தகைய ஏற்பாடுகள் ஏதாவது செய்ய உத்தேசமா வெனக் கேட்ட கேள்விக்கு சர்க்கார் தரப்பில் பின்வருமாறு பதிலளிக்கப்பட்டது:—சென்னையில் க்ஷயரோக ஸ்தாபன சிகிச்சை யொன்றும், ஆஸ்பத்திரி யொன்றும் ஸ்தாபித்து சர்க்காரால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றது. எழும்பூர் ஏரியில் பெரும் க்ஷயரோக ஆஸ்பத்திரி யொன்றை ஏறக்குறைய ஏழு லட்ச ரூபாய் செலவிட்டுக் கட்ட சர்க்காரால் தீர்மானிக்கப்பட்டிருப்பதால் அதன் சம்பந்தமான வேலைகள் சீக்கிரத்திலேயே துவக்கப்படும். மேலும் சர்க்கார் மதனபள்ளி, ராஜமகேந்திரவரம் ஆகிய இரு இடங்களிலுமுள்ள இரு க்ஷயரோக சிகிச்சை ஸ்தாபனங்களுக்கு முறையே 37500 ரூபாயும், 3000 ரூபாயும் கொடுத்துதவிவருகின்றது. மதனபள்ளியில் பின்னும் க்ஷயரோக சிகிச்சைஸ்தாபனம் கட்டுவதற்கு இவ்வருட வரவு செலவுத் திட்டத்தில் 7300 ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பதுடன், அடுத்தவருடத்தில் 25000 ரூபாய் ஒதுக்கவும் உத்தேசிக்கப்பட்டிருக்கின்றது. தாம்பரத்தில் க்ஷயரோக சிகிச்சை ஸ்தாபனம் கட்டி தேவையானகருவிகள் முதலியவையும் வாங்குவதற்குக் கட்டடச்செலவு முதலியவற்றிற்கு டாக்டர் முத்து பணவுதவி புரியும்படி சர்க்காருக்கு மனுக் கொடுத்திருக்கின்றார். அதன் சம்பந்தமாகச் சர்க்காரால் ஆலோசிக்கப்பட்டு வருகின்றது.

பஷீர் ஆமத்:—எழும்பூர் ஏரியில் க்ஷயரோக ஆஸ்பத்திரிகட்டும் திட்டம் கைவிடப்பட்டதா?

கனம் மந்திரி:—அவ்வாறு ஒன்றுமில்லை.

சத்தியமூர்த்தி.—சர்க்கார் அதன் சம்பந்தமான வேலைகளை நிறுத்தி வைக்க உத்தேசமா?

கனம் மந்திரி:—கட்டடவேலைகள் அதன் சம்பந்தமாக முடிவான தீர்மானத்திற்கு வரும் வரை நிறுத்தி வைக்கப்படும்.

ஹமீது கான்:—தாம்பரம் க்ஷயரோக சிகிச்சைஸ்தாபனத்திற்குப் பொருளுதவி செய்து அதனை அபிவிருத்தி செய்யக் கூடுமா?

கனம் மந்திரி:-அதுசிகிச்சை ஸ்தாபனமேயன்றி ஆஸ்பத்திரியல்ல. அத்தகைய ஸ்தாபனங்களுக்குப் பொருளுதவி செய்வதனால் ஆஸ்பத்திரிகளில் கிடைக்கும் நன்மைகள் கிடைக்கக் கூடுமெனக் கருதப்படவில்லை.

காளேஸ்வரராவ்:— மதனபள்ளி, ராஜமகேந்திரவரம் ஸ்தாபனங்களுக்கு சர்க்காரால் பொருளுதவி செய்யப்படுகின்றதா?

கனம் மந்திரி:—ஆம்.

காளேஸ்வரராவ்:— டாக்டர் முத்துவின் ஸ்தாபனத்துக்குத் தாராளமான பொருளுதவி செய்யப்படுமா?

கனம் மந்திரி:—அதனைக் குறித்தாலோசிக்கப்பட்டு வருகின்றது.

டாக்டர் மல்லையா:— பிரத்தியேக ஸ்தாபனங்களுக்கு எதனை ஆதாரமாகக் கொண்டு சர்க்காரால் பண உதவி செய்யப்படுகின்றது?

கனம் மந்திரி:—அந்த ஸ்தானங்களில் கட்டணம் வசூலிக்கப்பட்ட போதிலும் அது செலவுக்குக் கூடாதாகையினால் சர்க்கார் பொருளுதவி செய்து வருகின்றனர்.

டாக்டர் மல்லய்யா:— கணக்குகளைச் சர்க்கார் ஆடிட்டரால் தணிக்கை செய்யப்படுவதுண்டா?

கனம் மந்திரி:— மதனபள்ளியைக் குறித்த மட்டில் கணக்குகள் தணிக்கை செய்யப்படுவதுண்டு. ராஜமகேந்திரவரத்தைக் குறித்து தெரியாது.

வரவு செலவுத் திட்டம்

பொருளாதார மெம்பர் பேச்சு

கேள்விகளுக்குப் பதிலளித்து முடிந்ததும் பொருளாதார மெம்பர் திரு. டி. இ. மாயர் 1929—30ம் வருடத்து வரவு செலவு திட்டத்தைச் சபைமுன் ஆஜர் செய்து அதன் சம்பந்தமான விவரங்களை விளக்கிப் பேசினர். அதன் சாரமாவது:- நமது மொத்த வருமானம் 1807.09 லட்சம் கிடைக்கக் கூடுமென்று மதிப்பிடப்பட்டிருக்கின்றது. இதில் நிலவரி மூலமாக 753.92 லட்சமும், கலால் இலாகாமூலமாக 553.80லட்சமும், ஸ்டாம்புகள் மூலமாக 256.33லட்சமும், காட்டிலாகா மூலமாய் 60.38 லட்சமும், பத்திரப்பதிவு இலாக்கா மூலமாய் 36-75 லட்சமும் கிடைக்கக் கூடுமென்று கணக்கிடப்படுகின்றது. இதில் மொத்த செலவு 1726-10 லட்சம் ஆகக்கூடுமென்றுமதிப்பிடப்படுகின்றது. இவ்வருடம் புதிதாக 583 செலவினங்களுக்கு யோசனை கூறப்பட்டிருப்பினும் அவைகளையும் மேற்காட்டப்பட்ட செலவு மதிப்பில்தான் சேர்க்கப்பட்டிருக்கின்றது. பொது நிர்வாகத்தில் வடஆற்காடு ஜில்லாவிலிருந்து திருவண்ணாமலைதாலூகாவையும், பல்லா, ஜில்லாவிலிருந்துசிறுகுப்பா தாலூகாவையும் பிரிக்கவேண்டியதும் அவசியமாயிருப்பதுடன், ராமனாதபுரம் ஜில்லாவில் விருதுநகர் டெபுடி தாசில்தார் ஆபீஸையும் பிரித்து வைக்கப்படவேண்டுவதும் அவசியமாயிருக்கிறது. மேக வியாதிகளுக்கு சிகிச்சையளிப்பதன் சம்பந்தமாக அதிகப் பணம் செலவிடவேண்டிய அவசியமேற்பட்டிருப்பதுடன், நர்சுகள் வாசஸ்தலத்திற்கும், விசாகப்பட்டணம் ஆஸ்பத்திரியில் பின்னும் பல ஏற்பாடுகள் செய்யவேண்டுவதும் அவசியமாயிருக்கின்றது. ஸ்தல ஸ்தாபனங்களின் நிர்வாகத்திற்குட்பட்டுள்ள 12-ஆஸ்பத்திரிகளைச் சர்க்காரின் நிர்வாகத்திற்கு மாற்றிக்கொள்ளப்பட்டிருக்கின்றது. இந்திய சுதேச வைத்திய பாடசாலையைப் பின்னும் அபிவிருத்தி செய்ய வேண்டியது அவசியமாயிருப்பதுடன், சென்னையிலுள்ள வைத்தியசாலை ஆஸ்பத்திரியிலும் பல ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டியதாயிருக்கின்றது. மற்றும் ஜில்லாதலைமை ஸ்தானங்களிலுள்ள ஆஸ்பத்திரிகளில் சிலபுதியவார்டுகள் ஏற்படுத்தி அபிவிருத்தி செய்யத்திட்டமாகியிருப்பது மட்டுமன்றி, கிராமப்பிரதேச வைத்தியசாலைகளுக்குச் செய்யப்படும் பொருளுதவிக்காகவும் 1.37 லட்சம் ஒதுக்கப்படவேண்டியதாயிருக்கின்றது. பொது சுகாதார உத்தியோகஸ்தர்களின் தொகையை மிகுதிப்படுத்தி சிப்பந்திகளை பின்னும் அதிகமாய் நியமிக்க வேண்டியதாயிருக்கின்றது. தண்ணீர் சப்ளை, சாக்கடைத் திட்டம் முதலியவற்றின் சம்பந்தமாய் ஸ்தல ஸ்தாபனங்களுக்குக் கொடுக்கப்படும் கிராண்டுகளுக்காக 5 லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கின்றது. கிராமக்குடி தண்ணீர் சப்ளை சம்பந்தமான கிராண்டுகளுக்கு ரூபாய் 5,50 லட்சம் ஒதுக்கியிருக்கின்றோம். இவ்விலாகாவின் கீழ் மதுவிலக்குப் பிரசாரம்செய்வதற்காக 4லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கின்றதென்பதையும் முக்கியமாய்த் தெரிவித்துக் கொள்ளுகிறோம் சிவில்வேலைகளின்சம்பந்தமாக ரஸ்தாக்கள் பாலங்கள் முதலியவற்றிற்காக ஸ்தலஸ்தாபனங்களுக்குக் கொடுக்கப்படும் கிராண்டுகளுக்காக 12 லட்சமும், பழனிக்குச் செல்லும் பாதைக்காக 97000 ரூபா

(இதன் தொடர்ச்சி 6-ம் பக்கம் பார்க்க)